# ஆண்டாள் பாடல்களில் மரபு மீறல்கள்

**ந. திவ்யா**
**ஆய்வியல் நிறைஞர் (தமிழ்த்துறை)**
**சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**ஒட்டன்சத்திரம்**

**முன்னுரை**

ஆழ்வார்கள் பக்திக் கடலில் ஆழ்ந்தவர்கள், அறிவில் ஆழம் உடையவர்கள். அவர்தம் பாடல்கள் பக்திச் செறிவுடையன் மறைபொருளை விளக்குவன; தமிழ் வேதம் - தமிழ் மறை எனப் போற்றப்படுவன ''நாலாயிரத் திவ்விய பிரபந்தம்'' என்னும் பெயரால் வழங்கி வரும் சிறப்பிற்குரியன. ஆழ்வார்கள் பன்னிருவருள் கோதை என்னும் ஆண்டாள் ஒருவரே பெண்பாலர். பெண்மையின் திருவுருவாகத் திகழ்ந்தார்.

'சூடிக்கொடுத்த சுடர்கொடி' என்றும் 'நாச்சியார்' என்றும் பாராட்டப்படும் ஆண்டாள் பாடி அருளியவை 'திருப்பாவைப்' பாடல்கள் முப்பதும் நாச்சியார் திருமொழிப்பாக்கள் நூற்று நாற்பத்து மூன்றும் ஆக நூற்றி எழுபத்தி மூன்று பாடல்களாகும்.

''காலங்காலமாகப் பெண்களுக்கென ஆண் சமூகத்தால் பெண்களின் மீது திணிக்கப்பட்ட பண்புகளான அச்சம், நாணம்,மற்றும் தன்மான உணர்வைக் கூட வெளிப்படுத்த இயலாத கால கட்டத்தில் வாழ்ந்த பெண்ணான ஆண்டாள் மன உணர்ச்சிகளை, திருமாலின் மீதுள்ள காதலைப் பாடல் வடிவில் வெளிக்காட்டியுள்ளார். இவ்வாறு அவருடைய பாடல்களில் காணலாகும் மரபு மீறலை இவண் ஆராயலாம்.

**பாவை நோன்பு**

பாவை நோன்பு வேதங்களில் இல்லாத நோன்பு. வைணவப் புராணமான பாகவதம், யமுனை ஆற்றங்கரையில் கோகுலப் பெண்கள் மார்கழியில் விடியற்காலத்தில் நீராடிக் கரையில் கார்த்தியாயினி விரதம் இருந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.

இந்திய வரலாற்று விற்பன்னரான ரொமிலாதாப்பர் ''தமிழ்நாட்டில் முல்லை நிலத் தெய்வமான கரியநிறமாயோன் வழிபாட்டை ஆபிரர் என்னும் ஆயர்குல மக்கள் வடமதுரைக்கு எடுத்துச்சென்றனர், அங்கிருந்து வடநாடு முழுவதும் மேற்கிலும், கிழக்கிலும் கண்ணனின் வழிபாட்டைப் பரப்பினார்கள்'' என்று கருத இடமுண்டு என்று கூறுகிறார்.

மார்கழி திருவாதிரை அன்று தொடங்கும் மார்கழி நீராடல் தை முதல் நாள் வரை நீடிக்கும். இந்நீராடல்ஆயர்குல மகளிரன்;றி எல்லாக்குடி மகளிருக்கும் பொருந்தும் என்று திருவாதவூரர் புராணம் குறிப்பிடுகிறது. 'தமக்கு நல்ல கணவர் வாய்க்க வேண்டும், மாதம் மும்மாரி பெய்து நாடு நலம் பெற வேண்டும் என்று மகளிர் நோன்பு நோற்பர்'.

**தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து -** (திருப்பா-3)

தைநீராடல் நோன்பு சங்க இலக்கியங்களில் பொதுவாக அனைத்து சமூக பெண்களுக்காக இருந்தது அதனை பாவை நோன்பாக்கி தம் சமயமான வைணவத்திற்கே உரியதாக மாற்றிய பெருமை ஆண்டாளையே சேரும்.

இந்நோன்பின் போது இவருடைய வைணவ பாடலான திருப்பாவை மார்கழி மாதந்தோறும் சைவ இல்லங்களிலும் வழிபாடல் செய்யப்படுவதும் ஆண்டாளின் சிறப்பையே காட்டுகிறது.

அதாவது நோன்பு என்பது ஒரு காரணம் கருதி, மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, இறைவனையே சிந்தித்து, தான் எண்ணியது ஈடேற நோற்பது நோன்பு ஆகும். இதனை வள்ளுவர்,

**வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயல் படும். (குறள் 265)**

என்றும்

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" (குறள் 269)**

என்றும் குறள்களின் வழி உணர்த்துகிறார்.

சாவித்திரி 'நோற்ற' நோன்பும், மார்கண்டேயன் மேற்கொண்ட தவமும் எத்தகைய ஆற்றலுடையது என்பதை நம் புராணங்கள் உணர்த்துகின்றன.

**நோன்பு நோற்கும் காலமும் இடமும்**

பாவை நோன்பு நோற்கும் காலமும் இடமும் எப்படி இருத்தல் வேண்டும் என்பதை

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்**
**நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் -** (திருப்பா-1)

என்றும் மார்கழி மாதத்தில் 'பாவைக்களம்' அமைத்தும் அதில் முன்னர் கூறியதுபோல்

கூடி மழை வேண்டியும்,பெண்களுக்கு நல்ல கணவன் வேண்டும் என்றும் வழிபாடு செய்கின்றனர். அப்போது அவர்கள் மேற்கொள்ளும் உறுதிமொழிகள், தங்களைக் கட்டுப்பாட்டுடன் செயல்பட நெறிப்படுத்துகிறது.

**கூட்டு வழிபாட்டால் மகளிர் பெற்ற பரிசுகள்**

கூட்டு வழிபாட்டின் மூலம் கண்ணனிடம் பரிசுகள் பெற்றதை

**பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாகச**
**என்னும் அடிகள் சுட்டும் (திருப்பா - 27)**

நோன்பினை முடித்து, அணிகலன் பூண்டு, ஆடை உடுத்தி, பால்சோறு படைத்து கூடியிருந்து மகிழ்ந்து ஏழேழ் பிறவிக்கும் உன்னை நினைந்து வணங்கி உனக்கு ஆட்செய்து வாழ அருள் புரிய வேண்டிப் பெறுகின்றனர்.

நோன்புமுடிந்து அக்கார அடிசல் கண்ணனுக்குப் படைத்து நோன்பை நிறைவு செய்கின்றனர்.

**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்**
**செய்திட வேண்டுமம்மா அவர்**
**பங்கையக் கைநலம் பார்த்தல்லவோ**
**பாரினில் அறங்கள் வளருதம்மா.?**

என்று பாடிய கவிமணியின் வரிகள் ஆண்டாளின் கூட்டு வழிபாட்டுக்குப் பொருந்துவதாய் அமைந்துள்ளது.

**ஆண்டாளின் பக்தி மாண்பு**

ஆண்டாள் இறைவன் மீதான தனது பக்தியைக் காதலாக்கி வெளிப்படுத்திப் பக்தி இயக்க மரபில் மாற்றத்தை நிகழ்;த்தியவர். இறைத்தொண்டு புரிந்தமையால் இறைவனையே அனுதினமும் சிந்தித்துத் தன் மனம் முழுவதையும் அவனிடமே கொடுத்து அதற்காக அழுது புலம்பி தன் காதலை வெளிப்படுத்தியவர். ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையையே இறைவன் விரும்பி ஏற்றான் என்பது உண்மைக்கு அப்பாற்பட்டதாயினும், இந்த நிகழ்வு பெண்களின் இறைமைக் காதலை உயர்த்திப் போற்றியமையைக் காட்டுகிறது. வைணவக் கோயில்களில் ஆண்டாள் வழிபாடு இன்றளவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆண்டாள் உடுத்திய புடவை, அணிந்திருந்த மாலை, ஆண்டாளின் கிளி, ஜடை அனைத்தும் புரட்டாசி மாதம் பிரம்மோற்சவ நாளில் திருப்பதி வேங்கடமலையானுக்குச் சாத்தப்படுத்துகிறது. ஆண்டாள்திருவரங்கப் பெருமான் மீது கொண்ட பக்தி மாண்பினை,

**குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி**
**கடல் நிறக்கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு**
**உடலெனக்கு ருகுமாலோ என் செய்தேன் உலகத்தீரே** - (திருப்பள்ளியெழுச்சி பக்-35)

என்ற பாடல் வரிகளால் அறிந்துகொள்ள முடிகிறது

திருமாலையே அடைய வேண்டும் என்கிற தீரா வேட்கையை முன்வைக்கும் இடத்தே ஆண்டாளின் களவு நெறியும், அவனையே அடையும்படியாகக் கனவு காணுதல் ‘‘அவனுக்கன்றி மானிடர்கென்று பேச்சுப்படில் உயிர் துறப்பேன்” என்ற ஆண்டாளின் கூற்று பெற்றோரின் கட்டுபாட்டையும், பெண் மரபையும் மீறியதைக் காட்டுகிறது.

### ஆண்டாள் கவிதைகளில் கனவு வெளிப்பாடு

தமிழ் இலக்கியங்களிலும் கனவு பற்றிய பதிவுகளை காண முடிகிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் ‘கனாத்திறம் உரைத்த காதை, திருக்குறளில் காணப்படும் ‘கனவுநிலை உரைத்தல்’ ஆகியவை கனவுகள் பற்றிய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுகள் ஆகும். தன் பால்ய காலம் தொடங்கி பருவ வயது வரையில் கண்ணன் மீதான காதலில் உழன்ற ஆண்டாள் அது தொடர்பான தனது கனவு அனுபவங்களையே படைப்புகளாக்கியுள்ளார்.

கண்ணனின் காதல் வெளிப்பாட்டின் பயனாக ‘‘மழையை மாலவனாகப் பாவித்தும் அஃறிணைப் பொருளை உயர்திணையாகப் பாவித்தும்” பாடியுள்ளார்.

### மழையை மாலவனாகப் பாவித்தல்

தன் காதல் உணர்வின் வெளிப்பாட்டை காட்டிய ஆண்டாள்

**ஆழி மழைக்கண்ணா! ஓன்று நீ கைகர வேல்**
**ஆழியில் புக்கு முகர்ந்து கொடு ஆர்த்தேறி - (திருப்பா - 4)**

என்றும் பாடலடிகள் எம்பெருமான் நினைவால் ஆட்கொள்ளப்பட்ட ஆண்டாள் மழை வடிவிலும் மாலவனையே காண்கிறார்.

**அஃறிணைப் பொருளையும் உயர்திணையாக பாவித்தல்**

சங்க இலக்கியங்களில் தலைவி நினைப்பது போல், ஆண்டாளும்

**கருபுறம் நாறுமோ கமலப்பூ நாறுமோ**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ**
**மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விருப்புற்றுக் கேட்கிறேன் சொல்ஆழி வெண்சங்கே - (நாச்சி.திரு - 64)**

அஃறிணைப் பொருளான சங்கை உயிருள்ள ஜீவன் போல் எண்ணி, கடலில் பிறந்த வெண்மையான சங்கே, என் கண்ணனுடைய பவளம் போன்ற சிவந்த உதடுகள் கற்பூரம் போல மணக்குமோ? தாமரை மலர் போல மனம் வீசுமோ? தித்திப்புடன் இருக்குமோ சொல் என்று பெண்மைக்குரிய நாணத்தை மறந்து கண்ணனின் மீது காதல் கொண்டு கூறுகிறார்.

ஆண்டாளின் பாடல்கள் பக்திச்சுவை மட்டுமின்றி காதல் உணர்வும் பெருக்கெடுத்து ஓடக்கூடியவை. அவருடைய பாடல்கள் மரபுகளை மீறி இருப்பது காணப்படுகிறது.

**தன் உணர்வை மேகவிடு தூதில்**
**என்னாகத் திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும்**
**பொன்னாகம் புல்லுதற்கென் புரிவுடைமை செப்புமினே (நாச்சி.திரு-77)**

உடம்பில் மின்னல் தோன்றுகின்ற மேகங்களே திருமால் என் உடம்பிலுள்ள இளங்கொங்கைகளை விரும்பி என் அழகிய மார்பைத் தழுவ வேண்டும் என்று நாள்தோறும் நான் ஆசை கொண்டு இருப்பதைக் கூறுங்கள் என மேகத்தை தூது விடுகிறார். இவ்வாறு உடலாலும், உள்ளத்தாலும் தன் உணர்ச்சியை மரபிற்கு அப்பாற்பட்டு தூதாய் விடுத்துள்ளார்.

**காமத்தீயின் வாட்டம்**

தன் சாதாரண ஆசையைக் கூட வெளிப்படுத்த இயலாத நிலையில் வாழ்ந்த ஆண்டாள் தன் காமஉணர்ச்சியை ஊராரும் பலரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தியுள்ளார்.

**மாமுறித்த நிதி சொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்**
**சாமத்தின் நிறங்கொண்ட தாளாளன் வார்த்தையென்ன**
**காமத்தீயுள் புகுந்த கதுவட்டப்பட்டியைக் கங்குல்**
**ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நான் இருப்பேன் - (நாச்சி.திரு - 75)**

காமத்தீயானது புற உடம்பு முழுவதையும் எரித்துவிட்டு உள்ளே எரிக்க முயல்கிறதே என்றும், தென்றல் காற்று காமத்தை மேலும் மிகுவிக்கிறதே என்றும் ஆண்டாள் பாடுவது மரபிலிருந்து சற்றே மாற்றமடைந்துள்ளதைக் காட்டுகிறது.

**மரபு மீறல்கள்**

சங்கப் பெண்பாற் புலவர்களை அடுத்து நீண்டதோர் இடைவெளிக்குப் பின்னர் வலுவான சமயப் பின்புலத்தோடு கூடிய படைப்பாளிகளாக வெளிப்பட்டவர்கள். காரைக்காலம்மையாரும் (சைவம்), அக்கா மகாதேவியாரும் (கன்னட சைவம்), ஆண்டாளும் (வைணவம்), இம்மூன்று பெண்களுமே, பெண்கள் மீது சமூகத்தால் திணிக்கப்பட்ட மரபுகளுக்கு ஆளானவர்கள்.

இதுவரையில் உடல் சார்ந்ததாகவும், பாலியல் சார்ந்ததாகவும் சமூகத்தில் உருவாக்கப்பட்டிருந்த பால்பேதம் கொண்ட அனைத்துக் கலாச்சாரக் கட்டுமானங்களையும் தகர்த்தெறிந்து தன் எதிர்ப்பை வெளிப்படுத்திருப்பவர் ஆண்டாள்.

மரபார்ந்த பக்தி இலக்கியப் பாடல்களின் பாதையிலிருந்து சற்றே விலகிப் பெண்மொழிக்கு அடித்தளம் அமைக்கும் போக்கில் ஆண்டாளின் பாடல்கள் அமைந்திருப்பதை, அப்பிரதிகளைப் பெண்ணிய நோக்கில் மறுவாசிப்புக்கு உட்படுத்துகையில் விளங்கிக் கொள்ளமுடிகிறது.
பெண்களுக்குரிய குணங்களாக தொல்காப்பியர் கூறிய

**“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப” - (தொல் -1045)**

ஆகிய அனைத்தையும் புறந்தள்ளி விட்டு, தன் மரபு மீறலுடைய பாடல்வரிகள் ஆண்டாள் கூற்றில் வெட்ட வெளிச்சமாகின்றன.

காதலிக்கும் உரிமை பெற்ற மகளிர் மூன்று மாதத்திற்கு மேல் தங்கள் காதலைநீட்டிக்காமல் திருமணம் செய்து கொண்டு கற்பு வாழ்க்கையில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. காதல் மணம், ஏற்பாட்டு மணம் தவிர வேறு வகை மணமுறைகளும் அக்கால கட்டத்தில் இருந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. (தொல் - பொருள்.92)

பிறப்பே குடிமை
**...................... மிக்கோனாயினும் கடிவரையின்றே - (தொல் - பொருள் 273)**

திருமணத்தின் போது ஆணும், பெண்ணும் ஒத்த ஆண்மை அல்லது பெண்மை, பிறப்பு, குலச்சிறப்பு, அழகு, கல்வி, வயது, அன்பு, அருள், செல்வம், உணர்வு என்ற பண்புகளைச் சரிசமமாகப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறும் தொல்காப்பியர் கூற்றைச் சற்றே விலக்கித் தெய்வப் பிறப்பான திருமாலை அடைய மனிதப் பிறப்பெடுத்த ஆண்டாள் ஆசைப்படுவது மரபுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**உன்னித்து எழுந்தஎன் தடமுலைகள்**
**மானிட வர்க்குஎன்று பேச்சுப்படில்**
**வாழகில் லேன் கண்டாய்............ - (நாச்சி.திரு -5)**
**சிறுமானிடவரைக் காணில் நாணும்**
**கொங்கைத் தலம் இவை............ - (நாச்சி.திரு-124)**

ஆண்டாளின் வெளிப்படையான பேச்சுமொழி தெரிகிறது.

தூது என்பது அன்றைய கால கட்டம் முதல் இன்றைய காலகட்டம் வரையிலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. அதற்கு ஆண்டாள் மட்டும் என்ன விதிவிலக்கா?

**அவரைப் பிராயந் தொடங்கி என்றும்**
**ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள் - (நாச்சி.திரு -4)**
**தேச முன் அளந்தவன் திரிவிக்(கி)ரமன்**
**திருக்கைக ளால்என்னைத் தீண்டும்வண்ணம்**
**சாயுடை வயறும்என் தடமுலையும் - (நாச்சி.திரு - 7)**
**கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்(து) ஒருநாள்**
**தங்குமேல் என்னாவி தங்குமென் றுரையீரே - (நாச்சி.திரு - 80)**
**கொம்மை முலைகள் இடர்தீரக்**
**கோளந் தற்கோர் குற்றவேல" - (நாச்சி.திரு - 132)**
**ஆரா வமுதம் அனையான்தன்**
**அமுத வாயில் ஊறிய**
**நீர்தான் கொணர்ந்து புலராமே**
**பருக்கி யிளைப்பை நீக்கீரே" - (நாச்சி.திரு -127)**
**குற்ற மற்ற முலை தன்னைக்**
**குமரன் கோலப் பனைத்தோளோ(டு)**
**அற்ற குற்றம் அவைதீர**
**அனைய அமுக்கிக் கட்டீரே" - (நாச்சி.திரு - 130)**

பெண்கள் தங்களுடைய காதலைக் கூட வெளிப்படுத்த இயலாத காலத்தில் வாழ்ந்த ஆண்டாள் தன் பாடலில் தன் கொங்கையைத் தழுவ வேண்டும், அவன் மார்போடு என் மார்பைச் சேர்ந்து கட்டியணைத்துக்கொள்ள வேண்டும்என்று கூறுவது சிறிது மரபில் மாற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

மரபு வழியாக ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்கப்படும் அழகு, தோற்றப்பொலிவு அவற்றுக்கெல்லாம் மேலாகக் கல்வி அதனால் விளைந்த தனித்த ஆளுமையான கல்வித்திறன் ஆகிய அனைத்தும் தன்னிடம் கூடியிருந்த போதும், பிறப்பின் மர்மத்தால் திருமணச்சந்தையில்தான் புறந்தள்ளப்பட்ட ஆழ்மன ஆவேசம், பக்திப் பின்னணியோடு ஒருங்கிணைந்து இயக்கியதன் விளைவே மனித ஆணுக்கு எதிரான எதிர்ப்புக்குரலாகவும் மரபு மீறலாகவும் அவள் பாடல்கள் எதிர்வினையாற்றுகிறது எனலாம்.

சிலப்பதிகாரத்திலும் கண்ணகி தன் கணவன் இறந்த துயர்தாங்காமல் தன்முலையை வீசியெறிந்து தன்துயரத்தை வெளிப்படுத்தினால், அதுபோல ஆண்டாளும்

**கொள்ளும் பயனொன் றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்**
**ஆள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில் எறிந்தென் அழலைத் தீர்வேனே!**
**(நாச்சி.திரு-131)**

கண்ணனை, நான் பார்த்தால், ஒரு பயனும் கொள்ளாத என் கொங்கைகளை வேரோடும் பறித்தெடுத்து அவன் மார்பின் மீது வீசியெறிந்து என் கொடுந்துயர் தீர்வேன். இதுபோன்ற பல பாடலிலும் வெளிப்படுகின்றன.

பெண்கள் தனது உணர்வுகளைக் கூட வெளிப்படுத்த மறுக்கப்பட்ட சமூகத்தில் வாழ்ந்த ஆண்டாள், தன் உள்ள உணர்வை மற்றோர் நாணும் வண்ணம் வெளிப்படையாக கூறியது பெண்ணுக்குரிய மரபை மீறியுள்ளதைக் காட்டுகிறது.

**முடிவுரை**

காதல் என்பது இதிகாச புராண காலம் முதல் இன்றைய நவீன காலகட்டம் வரையில் அனைவரிடமும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு ஆண்டாள் மட்டும் என்ன விதிவிலக்கா? இல்லை ஆண்டாளும் திருமால் மீது காதல்வயற்பட்டார;. ஆனால் மற்ற பெண்களின் காதலைவிட ஆண்டாளின் காதல் சற்றே மரபு மாற்றத்திற்கு உட்பட்டது. ஏனெனில் இறைவனை அப்பனாக, அம்மையாக பார்த்த காலத்தில், ஆண்டாள் மட்டுமே தன் ஆசை நாயகனாகப் பார்த்தார்.

அதுமட்டுமின்றி தன்னுடைய காதலை காதலனிடமே கூட இலைமறைகாயாய் உணர்த்திய பெண்கள் பலரிருக்க, ஆண்டாள் மட்டும் தன் காதலை ‘‘காம உணர்ச்சிகள் ததும்ப’’ தன் பாடல்களில் கூறியுள்ளார். இத்தகைய காம உணர்ச்சியின் வெளிப்பாடு ஆண்டாள் பாடல்களில் உள்ள மரபு மீறல்களைக் காட்டுகிறது என்பது அறியப்படுகிறது.

**பார்வை நூல்கள்**


1. பாலசுப்பிரமணியன் டாக்டர்.சி, ஆண்பாள்
2. தண்.கி.வேங்கடாசலன், நாச்சியார் திருமொழி
3. திருப்பாவை, திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி - பாவை பப்ளிகேஷன்ஸ்
4. தொல்காப்பியம், கழக வெளியீடு
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை, சிலப்பதிகாரம்
6. தமிழண்ணல், திருக்குறள்